உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கிருபாநோக்கம் பெற்ற வினாவினர்.

# விடையெமக்கு வேண்டும்.

இஃது

நற்சீடர்களின் வேண்டுகோளுக்கிணங்கி

சித்தேரி

ஸ்ரீசேரமான் பெருமாணயனர் மடம்

அக்கிரசன்மன்

65-வது

ஸ்ரீமத் சே. மு. மாணிக்கவாசக சுவாமிகளால்

எழுதி

இராயவேலூர்

சுந்தர விநாயகர் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

பரிதாபி௵ ஆவணி ௴ 1௳

# ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளுடைய வம்சாவழி விளக்கம்.

ஆகாயம்
வாயு சலம்
வன்னி
|
ஆங்கிரஸ்
|
பிருஹஸ்பதி
|
பாரத்வாஜர்
|
துரோணாச்சாரி
|
அசுவத்தாமன்
|
பல்லவராயன்
* * *
ஸ்கந்தவர்ம பல்லவராயன் (கி-பி-68)
* * *
பாப்பர்வர்ம பல்லவன்
|
சிவஸ்கந்தவர்ம பல்லவராயன் (கி.பி. 150)
* * *
விஜயஸ்கந்தவர்ம பல்லவன்
|
விஜயபுத்தவர்ம பல்லவன்
* * *
த்ரிலோசனவர்ம பல்லவராயன்
* * *
உக்கிரதண்டவர்ம பல்லவராயன் (கி-பி-500)
|
பல்லவராஜ கீர்த்திப்ரதாப அத்தியந்தகாமன் (கி-பி-550)
|
மகேந்தரவர்ம பல்லவராயன் (கி-பி-567)
|
நரசிம்மவர்ம பல்லவராயன் (கி-பி-610)
|
2-வது மகேந்தர வர்மன்
|
பாமேஸ்வரவர்ம பல்லவராயன்
|
2-வது நரசிம்மவர்ம பல்லவன் (கி-பி-681)
|
2-வது பரமேஸ்வரவர்ம பல்லவன் (கி-பி-696)
|
நந்திபோத்றவர்மன் (கி-பி-733)
* * *
மானங்காத்த மழவராயதுரை
|
வீரப்பசூரமழவராயதுரை
|
குலங்காத்த மழவராயதுரை
|
ஸ்ரீ ராகவநாயகவர்மன்
|
ஸ்ரீ ஆறுமுகநாயகவர்மன்
|
ஸ்ரீ முத்துக்குமாரநாயகவர்மன்
|
ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசகநாயகவர்மா
அல்லது
*65-வது ஸ்ரீமத்———சுவாமிகள்

சாதியிலே அந்தரசாதியாகும்
சாதியிலே ஏகசாதியாகும்
சாதியிலே ஆண்சாதியாகும்
சாதியிலேஐம்பூதத்திலொன்றான சாதியாகும்

சற்குரு
நற்சீடா?
தற்சமயம், கற்கவேண்டியது.

1. மண் பஞ்சமன் துடுக்கன் துலுக்கன் மகம்மதியன்.
2. சலம் பார்ப்பானுக்கு மூத்தவன் பஞ்சமன். இளையவன்,
3. வன்னி அரசர்
4. வாயு செட்டி
5. ஆகாயம் சூத்திரன்.

முதல்சாதி அரசன்
இரண்டாஞ்சாதி படைகள்
மூன்றாஞ்சாதி குடிகள்
நான்காஞ்சாதி தொழிலாளிகள்
ஐந்தாஞ்சாதி பஞ்சமர்கள்

* அறு, பத்து, ஐந்து, ஆவது மேலேபார்.



அக்கிரசன்மன்.



COMMANDER-IN-CHIEF.



சேனாதிபதி.

# முகவுரை.

கேளுங்கள் என்னிரு கண்ணின் மணிகளே!

* தொண்டமண்டலத்தில் க்ஷீரநதிக்கு பூர்வ தக்ஷண திசையிலும், சீக்ஞ மலைக்கு பக்ஷிம திசையிலும், ஆரணிநகரத்திற்கு உத்திரதிசையிலும், "ஜெயராமனால்" நிர்மாணிக்கப்பட்டிருக்கும், வருணாசிரமத்தில் தங்கி தனதுள்ளத்தில் † உற்பவித்தவர்களுக்கு மாத்திரம் தன்னைத்தானறியக் கூடிய மார்க்கங்களைப் போதித்துக்கொண்டிருந்தனர்.

அச்சமயத்தில் அவ்வாசிரமத்தையணுகி அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரங்களைப்புரிந்து வாய்பொத்தி கைகட்டி நின்று சொல்லிக்கொள்வதற்கு வல்லமையற்று இவரோ "கண்டக்கோடாலி" ஆச்சுதே? என்று மௌனமாய் நிற்பதைக்கண்டறிந்த "விசுவாமித்திரர்" என்னும் பட்டபுதாரி அவர்களை ஆசீர்வதித்து அருகில் வருக வருக என்றனர்.

வந்திருந்தவர்கள் ‡ முகமலர்ச்சியற்று இருந்ததினால் ஏதோ சந்தேகங்கொண்டிருப்பதாகத் தெரிந்துகொண்ட "அண்ணல்" அவர்களை நோக்கி நீங்கள் உள்ளதை யுள்ளபடியுரைக்க உமிழ்நீர் குடிப்பதேன்? தாஷ்டீகமாய்த் "கருதலை" முன் சொல்லலாம். தனயர்களே! என்றவுடன் தங்கள் இருதயத்திலுள்ள சந்தேகங்களைக் கேட்டுத்தெளிதற்கு கிருபாநோக்கம் பெற்று வினாவினர். ஸ்ரீமத்—சுவாமிகாள்! எட்டெழுத்துக்களில் முதல் மூன்றை முன்னால்நிறுத்தி கடைஐந்தை பின்னால்நிறுத்தி யித்திரால் பெற்றிருக்கும் முதல் மூன்றுக்குமேல் பெற்றவர்களால் அழைத்த முதல் நான்கையுஞ்சேர்த்து இன்றுமுதல் அழைத்துவரவேண்டுமென தெரிவிக்கப்பட்டிருக்கிறது. உத்திரவுக்கு, எங்களிடம் சந்தேகம் பலதுள்ளது நிற்சந்தேகமாய் தெளிவிப்பது நின்உத்தரமே? அப்படியே அருள். ஞானபுத்திரர்காள்! ஞானத்தையடைய ஒருஞாயகுருவேண்டும். அப்படியோசிக்கில், ஸ்ரீமத் மகாவிசேஷம் அத்திரியூர் பிரம்மவன்னிவம்ச க்ஷத்ரியமஹா மடாலய இரத்தின சிம்மாசனாதிபதி சக்ரவர்த்தி சிவராஜயோகி ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகராதீன பரம்பரை சேனாதிபதி ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள் சன்னிதானம், முதல்:

---

* வேழமுடைத்து மலைநாடு மேதக்க, சோழவளநாடு சோறுடைத்து
பூழியர்கோன், தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்
நன்னாடு சான்றோருடைத்து. (ஔவையார்.) [தொண்டை.

† துர்க்குணங்களாகிய ராக த்வேஷ காமக் குரோத லோப மோஹ மத மாச்சர்ய ர்ஷய அஸூய டம்ப தர்ப்ப அகங்காரமாகிய பதின்மூன்று குணங்களென்றறியவும்.

‡ அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம். (நாயனார் குறள்.)

இரண்டாவது: மஹா மடாலயத்திற்குச்சேர்ந்த மடத்திலிராநின்ற மூலஸ்தான சுவாமிகளாகிய ஸ்ரீமத் பாஸ்கர சுவாமிகள் * சன்னதி:

மூன்றாவது: மஹா மடாலயத்திற்குச் சம்பந்த சம்பந்திகளில் ஒருவாராகவும், பெருமாள் சன்னதி † அர்ச்சகர்களாகவும் இருப்பவர்கள்.

நான்காவது: மஹா மடாலயத்திற்குச்சம்மந்தப்பட்டு வேறொரு ‡ இராஜ்ஜியத்தின் எல்லைக்குள்ளிருந்து வருகிறது.

ஐந்தாவது: ஜ்யார்ஜ் மஹாராஜா சக்கரவர்த்தி அவர்களின் அன்பு கூர்ந்து நிலைபெற்று சென்னை வன்னிகுல க்ஷத்ரிய மஹா சங்கம் என்றும் "வித்தியாதிபதியாம்" என்ற மகுடம் தங்களால் சூட்டப்பட்டதில் ஒன்று யிருக்கின்றது.

இத்தகைய சரித்திரங்களில் "முதல்வரின்" சரித்திரத்தைமாத்திரம் எங்களுக்கு கிருபைகூர்ந்து விளக்கவேண்டுமென கோரிவந்திருக்கின்றீர்கள். ஆம்! ஆம்!!

ஆனால் கேளுங்கள் நற்சிடர்களே! இம்மண்டலத்திற்கு "தலைவராக" இருந்து காலஹேதுவினால் விருத்தகாசிக்குச் சென்று ஆங்குள்ள நாற்றெட்டு பாளையப்பட்டு (சிற்றரசர்) களில் ஸ்ரீமத் சித்தேரிகுப்பம் கவனை சிம்மாசனாதிபதியாக விருந்த "மாணங்காத்த மழவராயதுரை" வம்சத்தவரும், விதேகமுத்தியடைந்த ஸ்ரீமத் குழந்தையானந்த சுவாமிகளை ஞான பிதாவாகக்கொண்டவரின் திருக்குமாரர்களில் ஒருவரும், ஷை சுவாமிகளின் பௌத்ரியும், ஸ்ரீமத் அழகானந்த சுவாமிகளின் புத்திரியுமான ஸ்ரீமதி பட்டபுமஹிஷி ஆனந்த வர்மணியின் நாயகர்.

இந்நாயகரோ நவரத்தினங்களிற் சிறந்த இரத்தினமாகும். அன்றி சற்சன சவகாச வாசகம் எழுதுபவரும் வருணத்தில் பிரம்மபின் வன்னி முன் உள்ளவருமான "விசுவாமித்திரர்" நாமம் வரப்பிரசாதத்தால் ஸ்ரீமத்— சுவாமிகள் என்ற பதம் இக்கோ——டு இட்டு மேற்குறித்தவாறு மனதிலுதிக்கப்பட்டது. மேலே அருள்வாக்கு பொலியப்பட்டது. இத்தியாதி விஷயங்களை காணப்பெற்றது. "விடையெமக்கு வேண்டும்" என்ற மகுடஞ்சூட்டி இந்நூல் எழுதப்பட்டிருக்கின்றது.

இதிலேதாவது பிழைகள் காணப்படினும் அதைச்சன்மார்க்கர்கள் விடுத்து, இதிலடங்கியிருக்கும் முக்கிய அம்சங்களை மாத்திரம் ஆராய்ச்சி செய்து அடியார்க்கு அடியேனான என்மீது கிருபைகூர்ந்து பதில் கொடுக்கமாட்டீர்களென நம்பும், பரதேசி.

---

* ஜீவநதிகளில் ஒன்று உபநதியுடன் சந்திக்கின்ற விசேடம் பொருந்திய இடமாகும்.

† குமளம் என்னும் நகரில் எழுந்தருளியிராநின்ற "ஸ்ரீனிவாசப்பெருமாள்" சன்னதியில்,

‡ நமது ஐந்தாவது ஜ்யார்ஜ் மஹாராஜா சக்ரவர்த்தி அவர்களின் அரசாட்சிக்குச் சம்மந்தப்படாத பிராஞ்சு தேசத்திலுள்ளது.

ஸ்ரீ வ்யப், திருச்சிற்றம்பலம். கிருபாநோக்கம்பெற்ற ஸ்ரீ ஆறு:

எல்லாஞ்
சிவம்.

ஆம்! ஆம்! !
மகாபாக்கியம் பெற்றேன்.
கேட்டதேவர். சொன்னதேவர்.
ஒப்புக்கொண்டதேது. தத்தஞ்செய்ததேது.
சிஷ்யன். குரு. மனம். ஆசை.

# விடையெமக்கு வேண்டும்.

---

## (1) ஜனனம்.

---

* கொங்குநாட்டில் "காவேரி" நதிக்கி தக்ஷண பக்ஷமதிசையிலும், திருவனந்தபுரத்திற்கு உத்தரதிசையிலும் குடகுநாட்டிற்கு பூர்வதிசையிலும், மகாவிசேஷம் பொருந்தியிருக்கின்ற அந்தியூர் பிரம்மவன்னிவம்ச க்ஷத்ரியமஹாடாலய இரத்தினசிம்மாசனாதிபதி சக்கரவர்த்தி சிவராஜ யோகி ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகராதீன பரம்பரை சேனாதிபதியும், சர்வாதிகாரியுமாகிய ஸ்ரீமத் ஆறுமுக சுவாமிகளின் புத்திரரும் ஞாயதுரை சோதி:-ரத்தினம் என்னும் பட்டபுதாரியுமாகிய †ஸ்ரீமத் முத்துக்குமார சுவாமிகளும், ஷையார் பட்டபு மஹிஷி ஸ்ரீமதி சின்னம்ம வர் மணியுஞ் செய்தவத்தால் சேயாக வந்திருக்கின்றனர்.

---

* பரிதியொடு வெண்மதி பரிக்கவொளி நல்கு
முருகெழு கனர்புதல்வ ஞ்ண்டவொருசிரா
விருசுட ருயிர்த்தவர்க ளாண்டவிருநாட்டின்
குருவென விளங்கியது கொங்கு வளநாடு.(பேரூர்ப்புராணம்)

† ஸ்ரீமுகத்தில் ஆடித்திங்களில் பிரகாசம்பொருந்திய சுபவேளையில் பின்நடக்கவேண்டிய காரியார்த்தத்திற்கு அறிகுறி தந்தைமதி யல்லவோ வந்தவிதி தனயர்க்கு. அன்றி பேரிளமைச் செல்வம் பிணி மூப்புச் சாக்காடாருங் கருவிலமைப்பு. "சிசுவிற்கு"

## (2) திருக்கணித ஜாதககருமப் பத்திரிகை.

அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

சீர்மேவும் பரிதிமதி சேய்மால்பொன் புகர்காரி திகழ்பாம்பானேர்
வார்மேவு மலாடியெஞ் சென்னிபுனைந் தாழ்விலையின் வகையனைத்தும்
பார்மேவுஞ் சோதிடத்தின் நான்முறையே திரிகாலப் பயன்கண் டுய்ய
ஏர்மேவுந் திருக்கணித சாதகபத் திரிகைதனை எழுது வோமால்.

நேரிசைவெண்பா,

ஏரார்வே தாங்க வியற்பொருளை யோர்ந்தெழுதுஞ்
சீரார்ந்த ஜாதகத்தின் திண்மையெலாம்—பாரோங்க
சாற்றவென் நாமேவிச் சாவித் திரியன்பாய்
காத்துப் புரந்திடுவாள் காண்.

சுலோகம்.

ஜனனீ ஜன்ம செளக்யாளும்
வர்த்தனி குலசம்பதாம்
பதவி பூர்வ புண்யாளும்
லிக்யதே ஜன்மபத்திரிகா.

ஸ்ரீ நவக்கிரக தேவதாப்யோநமஃ

| | | | |
|---|---|---|---|
| லக் | சூரி புத அ.ரா. | சுக் | 0 |
| 0 | இராசி. | | 0 |
| சனி சந் | | | 0 |
| 0 | 0 | கேது | குரு |

| | | | |
|---|---|---|---|
| சந் | 0 | சுக் | புத |
| கேது | நவாம்சம். | | சனி |
| லக் குரு | | | ராகு |
| அங் | சூரி | 0 | 0 |

ஸ்வஸ்திகாஸ்ரீ விஜயாப்யுதயஃ சிருஷ்டியாதி சென்றவூ 195, 58, 84, 976. வைவஸ்வதமநு கதாப்தம் 3, 89, 22, 974. கலியுகவூ 4976-க்கு விக்ரமாதித்யசகம் 1932 ஆங்கிலவூ 1874-க்கு பிரபவாதி 7-ஸ்பவநாமவூ சித்திரைமீ 26வ குருவாரம் அமரபக்ஷம் சஷ்டிதிதி 51-ம் 6, பூராட நக்ஷத்திரம் 3-ம் 29, சாத்தியநாமயோகம் 13-ம் 13, கரசை கரணம் 21-ம்

39, அன்றுதியாச்சியம் 23-ம் 37, அகசு 31-ம் 16, க்கு லக்கினம் இராசி 11 பாகை 21 கலை 29ல் ரேவதி 2 ல் மீனலக்கினத்தில் மகரநவாமிசையில் தாமதகுணவேளையில் குஜன்காலஹோரையில் பஞ்சபூதிய பிண்டசமஸ்காரம் புருஷபூதியமான ஆகாசகாலத்தில் ஜம்புத்தீவில் பாரத வருஷம் பாரதகண்டம் அங்காரகதேசம் சேரமண்டலத்தில் மகாவிசேஷம் பொருந்திய அந்தியூர் பிரம்ம வன்னிவம்ச க்ஷத்ரிய மஹாமடாலய இரத்தின சிம்மாசனாதிபதி சக்கரவர்த்தி சிவராஜயோகி ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகராதீன பரம்பரை சேனாதிபதி ஸ்ரீமத் ஆ. முத்துகுமார சுவாமிகள் அவர்களுக்கு ஜேஷ்டபுத்திர சுபஜனனம். மாதா பிதா ஜாதகர் சுபம் தீர்காயு:

## கிரகபாதசாரம்.

பரணி, 4ல் பிதுருகாரகன் சூரியபகவான்

உத்ராடம், 4ல் மாதுருகாரகன் சந்திரபகவான்.

கிருத்திகை, 1ல் சகோதிரகாரகன் குஜபகவான்.

அசுவனி, 3ல் மாதுலகாரகன் புதபகவான்.

உத்திரம் 2ல் புத்திரகாரகன் குருபகவான்.

ரோகணி, 2ல் களத்திரகாரகன் சுக்கிரபகவான்.

சிரவணம், 4ல் ஆயுட்காரகன் சனிபகவான்.

பரணி, 1ல் பிதாமககாரகன் ராகுபகவான்.

சுவாதி, 3ல் மாதாமககாரகன் கேதுபகவான்.

## மஹாதிசைவிவரம்.

உத்திராடநக்ஷத்திரம் ஆதியந்தம் 60-ம் 24ல் பாதப்பிரமாணம் 15-ம் 6-க்கு 4-வதுபாதச்செல்லு 6-ம் 25-க்கு சூரிய திசை வருஷம் 6-ல் கெற்பச்செல்லுபோக பாக்கி மாதம் 10, நாள் 10-க்கு பவநாமவரு சித்திரைமீ 26உ முதல் ஷ வருஷம் பங்குனிமீ 6உ வரையில் சம்பூரணம்.

| | | | | |
|---|---|---|---|---|
| சந்திரதிசைவரு 10-க்கு, | தாரணவரு பங்குனிமீ 6உ | வரை | சரி | |
| குஜதிசைவரு 7-க்கு, | கரவரு | ஷ | ஷ | ஷ |
| ராகுதிசைவரு 18-க்கு, | சௌமியவரு | ஷ | ஷ | ஷ |
| குருதிசைவரு 16-க்கு, | குரோதனவரு | ஷ | ஷ | ஷ |
| சனிதிசைவரு 19-க்கு, | தாரணவரு | ஷ | ஷ | ஷ |

## ஸ்புடவிவரம்.

சூரியஸ்புடம் ராசி 0, பா 25 கலை 13.

அயனஸ்புடம் ராசி 0, பா 20, கலை 38.

சாயனஸ்புடம் ராசி 1, பா 15, கலை 51.

இலக்கினபாவஸ்புடம் ராசி 11, பா 23, கலை 3.

குந்தனசோதனஸ்புடம் ராசி 5, பா 7, கலை 3.

ஜனன மாதத்திய உதையாற் பரவினடி 42.

இச்சாதகம் சேரநாட்டில் ஜனனமானபடியால்
இதற்கு இராசிமானமும் அக்ஷாம்சமும் வருமாறு

| | | |
|---|---|---|
| மீனம் மேடம். | 4—13. | அக்ஷாம்சம்பாகை 11, கலை 29. |
| ரிடப கும்பம். | 4—36. | சாயாங்குலம் 2-28. |
| மிதுன மகரம். | 5—15. | ரேகாம்சம் பச்சிமம் பா-2. கலை 6. |
| கடகம் தனசு. | 5—31. | தேசாந்திரம் 21 |
| சிங்கம் விருச்சிகம் | 5—19. | குணசங்கியை 88. |
| கன்னி துலாம். | 5—3. | |

கர்ப்போற்பத்தி விவரம்.

இச்சாதகம் ஜனனதினத்திற்குமுன் 294-ம் தினமாகிய ஸ்ரீமுகவூ ஆடிமீ 4உ குருவாரம் அமரபக்ஷம் அஷ்டமி திதி பரணி நக்ஷத்திரம் கூடியதினம் இரவு $45\frac{1}{4}$-நாழிகைக்குமேல் 49-நாழிகைக்குள் மேஷலக்கினத்தில் கர்ப்போற்பத்தி நிகழ்ந்திருத்தல் வேண்டுமென்பது ஜோதிஷ சாஸ்திர சித்தாந்தம்.

| | | | |
|---|---|---|---|
| 0 | லக். ராகு சந் | சுக் | புத |
| 0 | | | சூரி. குரு. |
| சனி | கற்போற்பத்தி கிரகநிலை. | | அங் |
| 0 | 0 | கேது | 0 |

ஆகக்கூடிய திசாயுர்த்தாய வூ 70, மீ 10, நாள் 10-க்கு தீர்க்காயுஃ சந்திரதிசை அங்காரகதிசை ராகுதிசைகளைவிட குருதிசை அந்தியத்தில் அதாவது வயது 50, 51-ல் கண்டம்வந்துநீங்கி வயது 70-ல் சனிதிசை அந்தியம் தீர்க்காயுஃ இலக்கினாதிபதி கேந்திரமேறி இலக்கினத்தைப் பார்ப்பதினாலும் ஆயுஷ்காரகன் சனிசொக்ஷேத்ரனாயிருப்பதினாலும் அஷ்டமாதிபனும் சொக்ஷேத்திரம் பெற்றிருப்பதினாலும் பூரணாயுள் ஜாதகமென்று நிர்ணயிக்கப்பட்டது.

## இலக்னாதிபலன்கள்.

குரு இலக்னாதிபதியாய் ஏழாமிடத்தில் நின்று இலக்னத்தையும் சந்திரலக்னத்தையும் திருஷ்டிப்பதினால் ஜாதகற்கு ஆயுள்விருத்தியும் நற்குணமும் புத்திநுட்பமும் தெய்வபக்தியும் குலாதிபத்யமும் கருணையும்

இதைக்கண்ட பிறகாவது தம்மால் குறிக்கப்படும் ஓர் பொதுவிடத்தில் தன்னைத் தருவித்து வன்னியர் என்னும்குலத்தவர்கள் க்ஷத்திரசர்தியென்பதையும், ஸ்ரீசேரமான் பெருமாணுயனுர் வன்னியரல்லர் என்பதையும் அறிஞர்முன்னிலையில் ருஜூப்படுத்தி ஜயமடைவாரென எதிர்நோக்கி நிற்கின்றோம் என பிரசுரித்திருக்கிறது.

இப்படிக்கு,

(ஒப்பம்) சே. மு. மாணிக்கவாசக நாயகவர்மா,

ஹெட்டாபீஸ், அந்தியூர். 19—11—09. } சேனுதிபதி க்ஷத்ரியர்களின் மஹாமடாலயம் பிராஞ்சு ஆபீஸ் சேலம்.

---

சேலம் டவுன்போலீஸ் இனிஸ்பெக்ட்டர் அவர்கள் சமூகத்திற்கு நான் தெரிவித்துக்கொண்ட அறிக்கை யாதெனில்:—

சேலம் வானசாஸ்திர ஆபீசில் வேலை செய்யும் ஏஸ். குப்புசாமி பிள்ளை யென்பவர் (21-11-09) ஞாயிற்றுக்கிழமைதினம் மாலை 4-மணிக்கு பைரங்கமான யிடத்தில் வன்னியகுலத்தாரைப்பற்றி பிரசங்கஞ் செய்வதாக இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் நோட்டீஸை பிரசுரித்திருக்கிருரென்றும், அவரவ்விதம் பிரசங்கம் நடத்தும்பட்சத்தில் இந்த டவுனில் வாசஞ்செய்துவரும் வன்னிய குலத்தவர்களால் ஒருவேளை அவரை எதிர்க்கும்படியான கலகங்களுண்டாகுமென்றும், ஆகையினுல் ஷையார்செய்யும் பிரசங்கத்தை நிறுத்தும்படியாகத் தன்னுல் கேட்டுக் கொள்ளப்படுகிறதென்றும் தெரிவித்திருக்கிருர்.

சேலம், 20-11-09. } (ஒப்பம்.) சே. மு. மாணிக்கவாசகநாயகவர்மா.

---

1909ஞு நவம்பர்மீ 21உ சேலம் டவுன் போலீஸ் இனிஸ்பெக்டர் அவர்கள் சேனுதிபதிஅவர்களை விசாரணை செய்தது யாதெனில்:—

**போலீசார்:** உமது பெயரென்ன?

**சேனுதிபதி:** மாணிக்கவாசக நாயகவர்மா.

**போ.** உமது தொழிலென்ன?

**சே.** பிரம்ம வன்னிவம்ச க்ஷத்ரிய மஹாமடாலய சேனுதிபதி.

**போ.** உமதிருப்பிட மெங்கே?

**சே.** கோயமுத்தூர்ஜில்லா பவானிதாலுக்கா அந்தியூர்.

**போ.** இவ்விடம் வந்தகாரணம் யாது.

**சே.** சிஷ்யர்களை ஆச்சார சீர்திருத்தஞ் செய்வதற்காகவும், அவர்களால் சமர்ப்பிக்கப்படும் பாதகாணிக்கை கப்பங்களைப் பெற்றுக் கொண்டு போகவும் வந்தேன்.

போ. இந்தடவுனில் குடியிருக்கும் வன்னியர்களின் சங்கையென்ன?

சே. சுமார் ஐயாயிரம் பேர்களுண்டு.

போ. இவ்விடத்திலிருக்கும் இத்தனை வன்னியர்களுக்கில்லாத பொருப்பும், சங்கடங்களும் உமக்கேன்?

சே. வன்னி குலத்தைப்பற்றி எந்தயிடத்திலாகிலும், எவ்வித குழப்பங்களுண்டாகிலும், அதற்கெல்லாம் யான்தான் முன்னின்று நடத்தவேண்டியது.

போ. குப்புசாமி பிள்ளை ஒருவன்தானு? அல்லது இன்னம் யாராவதுண்டா!

சே. இன்னமனேகருண்டு, ஆனல் அவாள் ரிகார்டு மூலமாய் அகப்படவில்லை.

போ. சேரமான் பெருமாணயனர் என்றல் அவர்யார்.

சே. இப்போதைக்குச்சுமார் ஆயிரத்தெண்ணூறு வருடங்களுக்குமுந்தி இந்த சேலம் நகரத்தை அரசாட்சி செய்திருந்த மஹாராஜ சக்கரவர்த்தியாகும்.

போ. இந்தசேரர் இந்தசேலத்தை அரசாட்சி செய்திருந்ததற்கு ஏதாவது ரிகார்டுகளுண்டா?

சே. உண்டு. அதாவது இந்த ஸ்தலபுராணமே சாட்சியம்.

போ. அவரின் சாதியென்ன விவரப்படுத்தும்.

சே. வன்னிகுலத்திலுதித்த வரென்பதற்கு சேரளமகாத்மியம், சேரள வுற்பத்தி முதலிய கிரந்தங்களே விவரிக்கும்.

போ. எதிரி பிரசங்கஞ்செய்வதினல் உமக்குண்டாகும் நஷ்டமென்ன?

சே. நமக்கொன்றும் நஷ்டமில்லை, ஆனல் கவர்ன்மெண்டாருக்கு அதிக அலச்சலுண்டாகும்.

போ. கவர்ன்மெண்டாருக்கு அலச்சலுண்டாக்க காரணமென்ன?

சே. இந்த டவுனிலும், இதற்கடுத்த சுற்றுபக்கங்களிலும்,வன்னியர்கள் ஏராளமாயிருப்பதினல் எதிரி யேதாவது இகழ்ச்சியாகப் பேசிவிடும் பட்சத்தில் பெருத்த கலகமுண்டாவதில் தடையில்லை. அந்த சமயத்தில் அந்த கலகத்தை அடக்கிவைப்பதற்காக சர்க்கார் அலச்சல் அதிகமாகப்படவேண்டியதாகும்.

போ. கலகமேற்பட்டால் சர்க்கார் சட்டப்படி நடத்தமாட்டார்களோ?

சே. அதற்காகத்தான் முன்னடி நானே தங்களிடத்தில் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. இனிதாங்கள் எவரால் எவருக்குதூஷணை முன்னடி ஏற்படுகிறதோ அவரைச்சட்டப்படி நடத்துவதில் தடையில்லை.

---

அளவளாவிய நட்புநிலமையுடன் வாழ்ந்திருப்பார்களென்றும், சிறுபான்மை சிற்சிலசமயங்களில் களத்திரம் பிணியால் பீடிக்கப்பட்ட சரீரசுபாவமுடையதாயிருக்குமென்றும், சுக்கிரன் 3-ல் இருப்பதினால் அவ்விதகளத்திரத்திற்கு தாய்வர்க்கசுகமும் சகோதரவர்க்கவிருத்தியும் அவலமாய்விடுமென்றும் சோதிடசாஸ்திரவிதிப்படி நிர்ணயிக்கப்பட்டது.

* இவ்விஷயத்தை "பிருஹஜ்ஜாதகம் சுகர்நாடி கேரள சிந்தாமணி" என்னும்சோதிட நூற்களினால் அங்கை நெல்லிக்கனிபோல் மயர்வறத் தெளிந்துணர்க.

ஜாதகர் ஜனனம் ஆதியில் ரவியின் திசையாதலினால் சனிதிசையில் பூரணையுமென்றும் அத்திசை ஆரம்பத்திலேயே களத்திரம் நற்பதவிபெறுமென்றும் கணிக்கப்பட்டது.

தாயுக்குஞ் சேயுக்குஞ் சம்பந்தமாயிருந்த உந்திக்கொடியைச் சேடியர்கள் துண்டிப்பதற்குமுன் பிதாநீரிற்படிந்து நிறைகடன்களை முடித்துக்கொண்டுவந்து மேற்குறித்தபடி ஜாதகருமமெழுதிவைத்து தன்னாலியன்ற தானதர்மங்களைக்கொடுத்து குழந்தையின் நாபிக்கொடியைச்சேதித்து அக்குழந்தையின் சர்வாங்கங்களும் வெந்நீரினால் சுத்திசெய்துவைத்து பத்தரைமாற்றுப் பசும்பொன்னையும் நற்பவளத்தையுங்கூட்டிச் செந்தேனிலுரைத்து மந்தித்து குழந்தையின் நாவில் தடவி † முகதரிசனம் பிதா பார்த்தானந்தித்தவுடன் மாதாவின் கும்பகலசங்களை வெந்நீரினால் மேல் சுத்தஞ்செய்து வலதுபக்கத்திலமைந்திருக்கும் கொங்கையின் துவாரம்பொருந்தியநுனியை மைந்தனுடைய திருவாயில்வைத்து பாலுண்ணச் செய்தனர்கள். இதனால் அக்குழந்தையின் "பூர்வஞானம்" தவறி இந்த அஞ்ஞானக்கடலிலழுந்தி சொல்லுவதாவது கேளும்மானிடர்களே!

"பல்லவி."

அமுர்தமுண்டேன் காணுண்டே அமுர்தமுண்டேன்காண

அனுபல்லவி.

அமுர்தமுண்டேன்கே ளாதரவாகவே
அன்னைதன்மார்போ டென்னையணைத்து
குமுதமான அருள் பாலைத்தாருமல்
கொடியபாவி பொருள்பாலைதந்திட்டாள். (அ)

---

* இத்திருக்கணித ஜாதகரும பத்திரிகையை பிழையற சோதித்தவர் இராயவேலூருக்கடுத்த தக்ஷணதிசையில் முல்லைநிலமாக்கள் வாசஞ்செய்த "பாடி" அல்லது பாலைநிலமாக்கள் பெண்ணைபைசாசம் அல்லது இராக்ஷவிவாகஞ் செய்துக்கொண்ட வேலப்பாடியில் வசிக்கும் வித்துவான் பாலஜோதிஷம் வ. கு. வேலுநாயகர்.

† சந்தேக நிவர்த்திக்காக வென்றறியவேண்டியதாகும்.

சரணங்கள்.

இல்லறமீதென்று இருந்த கருவுக்கு
இன்பமெல்லாம்விட்டுத் துன்பத் துக்காளாக
பொல்லாப்பசியாலே காமப்பாலையுண்டேன்
புத்திகெடுமென்று சற்றுமறியாமல். (அ)
சித்தடிரெண்டும் தத்தடிக்கொள்ளவும்
செங்கையினல் வளர் கொங்கையைக்கிள்ளவும்
முத்தாடிக்கொண்டு முகத்தோடணைக்கவும்
மூறியேகாமப்பா லூறலைத்தந்தாள். (அ)
ஓங்கியேகேளிக்கைக் கொப்பானகொங்கையை
ஒத்தகரத்தாலே மத்தகத்தைத்தொட்டு
தாங்கியே நிற்கவும் பாங்கியணைக்கவும்
தாவிமடிமேலே மேவியிருந்தநான். (அ)

### (3) நாமகரணம்.

பிறந்த பத்துகழிந்த பதிஞேரும் நாளில், மாதா பிதா புத்திரன் மற்றுமுள்ள பந்துமித்திரர்களும், சுத்தமடைய புண்யாஹவாசனம் நவக்ரஹசாந்தி முதலியது முடித்து பெரியோர்களின் *அநுக்ரஹம்பெற்று பனிரெண்டாம்நாள் சுபவேளையில் †மாணிக்க—வர்மன் என்று நாமகரணஞ்சூட்டினர்கள்.

### (4) சந்திரமீதித்தல்.

பிறந்த மூன்ருந்திங்கள் சுபலக்கினத்தில் இருளைபொழித்து பிரகாசத்தைத்தருகின்ற ஆயிரங்கிரணங்களையுடையபாஸ்கரனை தரிசனஞ்செய்வித்து நான்காந்திங்களன்று சுபவேளையிலஷோடச கலைகளையுடைய சோமனை தரிசனஞ்செய்துவைத்து பத்தாமிடஞ் சுத்தியாயிருக்கையில் ஓமம்வளர்த்தி குழவியின் உச்சியை தந்தைமோர்ந்து பெரியோர்களால் ஆசீர்வதிக்கப்பெற்று ‡முச்சந்துமூலமாய் சர்வவல்லபரைத் தமது ஆலயத்துள் தரிசனஞ் செய்வதற்கு அருகராஞர்கள்.

### (5) அன்னப்ராசனம்.

பிறந்தமுதலயனத்தில் சுபலக்கினத்தில் விதிப்படி கிரியைகளை முடித்து மதுரமாகிய பாயசத்தையூட்டி பாச்சி சோச்சி என §தமிழில்கற்பித்தனர்.

*நவக்கிரஹத்திற்கு யேன்மையாயுள்ள தசக்கிரஹமென்றறிவீர். †முன் வந்திருந்தபோது கவிரூபமாக ஞானகாண்டத்தை முடித்து வெளிப்படுத்தியதாகவும் பாக்கிநின்ற கருமகாண்டத்தை தற்காலம் வாசகரூபமாய் முடித்து வெளிப்படுத்த வந்திருப்பதினல் பழமையாகிய பேரையே வைத்தழைக்க வேண்டுமென ஆன்ருேர்கள் அநுக்ரஹஞ் செய்தனர்களென நம்பவேண்டும். ‡இவ்விடம் புத்தியைச் செலுத்தவேண்டும். § இவ்வுலகத்திலுள்ள சர்வபாஷைகளிலும் மிகச்சிறந்தது தாய்பாஷையே இப்பாஷையைத்தான் அறிவுடையோர்கள் தமிழ்பாஷையெனமொழிவர்.

னேதலுற்றது தனக்குனக்குயிர்கணே
பூதலத்தமர்த்தலே பொய்க்கவென்றனன்.

கேளுங்கள் இச்சபையிலுள்ள கல்வியாளரே 'இந்ததர்க்கியைப் பார்த்து வரவழைத்த குழந்தைவேல் வன்னியனுரின் கருத்துயாதோ தெரிகிலேம். ஆயினும், இவர் விளம்பியிருக்கும் கவிகளின் தாத்பரியமும் யான் விளம்பியிருக்கும் கவிகளின் தாத்பரியமும் சர்வத்திராளுக்குந் தெரிந்திருந்தபோதிலும், சுருக்கமாக சிலவற்றை விவரிக்கின்றேம். செவி சாய்ப்பீர்களாகவும், மேலே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும், பரசுராமன் வம்சத்தில் க்ஷத்ரியவம்சமேயாகும், எப்படியெனில்:—

அரசர்களுக்குரிய சின்னங்களோடு போர்புரிந்ததாகவுஞ் சொல்லப் பட்டிருக்கிறதினுல். அன்றி, இராஜகன்னிகையின் கெற்பத்திலுதித் தோன் இதுவுமல்லாமல் கன்னமகாராஜனுக்கு கொடுத்திருக்குஞ் சாபமே பேரீதியசான்ரும்.

இதுகளையெல்லாம் நீக்கி ப்ராமணனேயென்று சொல்லத்துணி வார்களேயாஞல் அதுவுமெனக்குச்சம்மதியே ஆனல் ஓர் சந்தேகமுளது அதுயாதெனில்:— பரசுராமன் சிரஞ்சீவி புருஷனுக வரப்பிரசாதம் பெற் றிருந்தாலும், யுகம்முடிவுபெற்று ஜலப்பிரளயமானகாலத்தில் தான் தப் பித்திருந்தது எப்படி, ஒருக்கால் தனது தவவலுமையால் தப்பித்திருந்த தாக சொல்ல முன்வருவார்களே யாஞல் தற்காலம் எங்கே யொளித்தார். இதற்கும் தகுந்தசமாதானஞ் சொல்லமேதாவிகளால் முடியும்பட்சத்தில் பரசுராமன் சத்தியவாஞே வென்றகேழ்விக்கு அசத்தியவானேயாகுமென ருஜுப்படுத்துகின்றேம்.

கிரேதாயுகத்தில். சூரியவம்சத்திலுதித்து இப்பூமண்டலத்தை ஏக சக்ராதிபதியாய் செங்கோலோச்சிய கார்த்தவீரியார்ச்சுனரின் பகையைக் கொண்ட பரசுராமன் மற்றெல்லாவரசர்களேயும் கொலைத்துணிவு பெற்றகாரணம்யாது. அப்படியுமொருகால்கொன்றதுண்மையாகில் மிகுதி நின்ற மன்னர்களிடத்தில் தான்புறமுதுகிட்டோடிய காரணம்யாது. இதி ஞல், தான் க்ஷத்திரியர்களை வேரறுத்துவிடுகிறேனென்ற சபதம் பொய் யாயிற்றல்லவா?

திரேதாயுகத்தில் ஸ்ரீராமபாணத்திற்குப் பாதகாணிக்கையாக தன் னுடைய தவம், வில்வாளாயுதமுதலியவைகளை ஒப்பித்துவிட்டு இனி மன்னர்களோடு போர்புரிவதில்லையென்று சத்தியஞ்செய்திருக்கும் பரசு ராமன் தனது சிஷ்யனுன வீஸ்மோசாரியிடத்தில் போர்புரிந்ததினுல் அசத்தியவானல்லவோ?

துவாபரயுகத்தில், காசிராஜன் புதல்விக்குத்தனது சிஷ்யனை புருட ஞக சேயித்துவைக்கின்றேனென்று வாக்களித்துவிட்டு அந்தவாக்கி

யத்தை நிரைவேற்ற தோடியதினுல் முக்காலும் பொய்யன் பொய்யனே அறிவீர்.

இத்தியாதிவிஷயங்களை தீர்க்கஆலோசனைசெய்து பார்த்தவர்களிந்த பரசுராமனை ப்ராமணனென்று சொல்லிக்கொண்டு முன்வந்திரார்கள். அல்லது க்ஷத்திரியனென்று யான்சொன்னதையுங்கூட உத்தமக்ஷத்ரியர்கள் ஒப்பவேமாட்டார்கள். ஏனென்றால் முன்வைத்தகாலை பின்வாங்காது போர்புரியக்கூடிய வீரதீரனுமல்ல, சொன்னசொல்லின்பேரில் திஷ்டிவைக்காத சுத்தபொய்யன், ஆகையினுலிவனை மேல்ஜாதிதந்தையும், கீழ்ஜாதிதாயாருஞ் சேர்ந்து ஜனிப்பித்த அந்தரஜாதியாகும். என்ன சொல்லுகிறீர் தர்க்கிகளே!

பார்ப்பார்: வாஸ்தவந்தான். வர்மரே! ஆனுல் வன்னியர்கள் க்ஷத்திரியர்களோ?

சேனாதிபதி: ஆம். ஆம்.

பா. சுருதி ஆதாரமுண்டோ.

சே. உண்டு. அதாவது மஹாபாரதம், ஆரண்ணியபர்வம், மார்கண்டேயசருக்கம், 222-வது அத்தியாயம், முதல் சுலோகம்.

அக்கிகாம்விவிதா வம்ஸாகீர்த்திதாஸ்தேமயாநக
சுருணுஜன்மதுகௌரவ்வியகார்த்திகேயஸ்யதீமதஃ

பா. சரி சரி இந்த சுலோகக்கருத்தினுல் அக்கி (வன்னி) அம்சத்திலுற்பவித்த வேந்தர்களுண்டென்று தெரிந்துகொண்டேம். ஆயினும், இங்குள்ள வன்னியர்கள் அரசவம்சத்தவர்கள் தானே?

சே. இவர்களும், இராஜவம்சத்தைச் சேர்ந்தவர்களென்றே நம்பிதான் இங்குவந்தேன். ஆனுல் இவர்களிடத்தில் மன்னர் களுக்குரிய நற்குணங்களும், நற்செய்கைகளும், அறிவொழுக் கங்களும், ஜீவகாருண்யங்களும், குலாபிமானங்களும், குருவிசுவாசமும், தெய்வபக்தியும் கிஞ்சித்தேனுங்கிடையாது. கிடைக்கப்பெற்றிருப்பார்களேயாயின் "கன்மனப் பார்ப்பார்" தங்களை அழைத்து என்முன்பாக விட்டு வேடிக்கைபார்க்க சற்றேனும் துணிவு கொள்ளவே மாட்டார்கள்.

பா. வன்னியர்களில் எத்தனைபிரிவுகளுண்டு.

சே. ஸோமஸூரியாக்கியிலுதித்த மன்னர்கள் சேர, சோழ, பாண்டிய, பல்லவ, சளுக்கியர்களாக பிரிந்திருந்தாலும் ஒன்றுதான். ஆனுல் சிரேஷ்டம், கனிஷ்டம், என்று இரண்டு பிரிவுகளுண்டு ஏனெனில் யாகாதி ஓமங்களிலெறியும் அக்கிக்கு ஆகுதிகளும், வந்தனேபசாரங்களுமென்ன அசுசியாகிய மலமூத்ராதி புல் பூண்டுகளை எரித்து சாம்பலாக்கக் கூடிய வன்னி (அக்கிக்கு) ஏதாவது ஆகுதிகளும், வந்தனேபசாரங்களுமுண்டோ?

தோணப்படுகிறதாகையால் இன்றே இத்தொழிலை இராஜிநாமாகொடுத்து விட்டு உங்கள் பரம்பரை தொழிலைக் கைப்பற்றவேண்டியதென வற்புறுத்தினராம்.

இவர் ஷியாரின் வார்த்தைக் கிணங்கியவரானாலும், இன்னம் உயர்ந்த பதவிக்குப்போக வேண்டுமென்ற ஆசைமேலிட்டு வருங்காலத்தில் ஓர்நாள் தனது சிஷ்யவர்க்கங்களிலொருவன் குற்றஞ்செய்ததாகத் தமது முன்னிலையில் கொண்டுவந்திருக்கையில் அவனைத்தமது மேலதிகாரி ஒருவனுக்கு விரோதமாய் சாதியென்று பிறரால் வழங்கிவரும் பட்டப்பெயரை யிகழ்ந்து பேசியதினால் இவருக்குப் பொல்லாக் கோபமுதித்து நாமொரு ரணரங்க சூரனாயமைந்து அதற்குரிய இராஜசின்னங்களோடு முன்னிற்பதையும் கவனியாது பேசியநாவைத் துண்டிப்பேனிதோ வென்றனர்.

இக்கோபத்தைக்கண்ட அதிகாரி மிகப்பயந்து தக்கசமாதானங்களை இவருக்குச் சொல்லிவிட்டு தனதுள்ளத்தில மாத்திரம் கிலேசமுற்று சமயம் பார்த்துக்கொண்டு வருகையில் இவரின் *ஊழ்வினைப்பயனாலும் மேலே பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கும் குலாபிமானியவர்களின் சொல்லைக்கேட்டு அவ்விதம் நடவாமல் தவறியதாலும் "இராமதாசனைப்போல்" சஞ்சலப்பட்டு வினைமுடிந்தவுடன் ஜெயம்பெற்று "உத்தியோகம் புருஷலக்ஷணமே அதிலமர்தல் அவலக்ஷணமே" என்றெண்ணி கை வேலையை இராஜிநாமா கொடுத்துவிட்டனர்.



(13) திருமண மகுடாபிஷேகம் பெற்றது.

இவருக்கு நல்ல சுபமுகூர்த்தத்தில் சேலம் நகரில் மகாவிசேஷம் பொருந்திய அந்தியூர் பிரம்மவன்னிவம்ச க்ஷத்ரியமஹாமடாலய இரத்தினசிம்மாசனாதிபதி சக்கரவர்த்தி சிவயோகி ஸ்ரீஅகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகராகிய ஸ்ரீமத் குழந்தையானந்த சுவாமிகள் பௌத்திரியும் ஸ்ரீமத் அழகானந்த சுவாமிகளின் சிரேஷ்ட புத்திரியுமாகிய ஸ்ரீமதி ஆனந்த வர்மணியை பட்டபுமஹிஷியாக கன்னிகாதானஞ் செய்துக் கொடுத்து இவரின்பழமையாகியசேனாதிபதி மகு[illegible]

*பதியினையாண்ட. பார்த்திபர்க் கே[illegible]
விதிவழிதானே விளைந்திடு மறி[illegible]



# முன் வருவதை
# கியாபகப் படுத்துகிறேன்.

*** அரிங்சவர்களுக்கெல்லாம் இந்நூல் யாதொரு பிரயோஜனத்தையுந்தாமாட்டாதெனத் தோணப்படினும், இதைத் திரும்பத்திரும்ப கவனத்துடன்வாசித்தால் எழுதினவரின் பதம், கருத்து, விசேஷம் இன்னதென்றறிவீர்கள்.

ஆனல், கள்ளுக்கடைச் சிந்து காவடிச்சிந்து கலியுகச் சிந்துகளை வாசித்தால் பலனென்னவென்று அவகூஷியம் செய்வார்களோ? அறிவிற்சிறந்த பெரியோர்களெவ்வித ‡அலகூஷியமும் செய்யமாட்டார்கள்.

ஏனென்ருல் நத்தையில் முத்திருப்பதையறிந்த பிரகல்லவோ நாடிஞரைவருமறிவீர். அறிவீர்.



அன்பர்காள்! இந்நூலை முழுதும் வாசித்து தங்கள் தங்களுடைய கருத்திலுதித்ததை எமக்குத் திரும்ப தெரிவிக்க வேண்டியது உங்கள் கடமையென அறியவேண்டியது.

---

‡ சலதாரை வீழுநீருஞ் சாகரந்தன்னைச்சார்ந்தாற், குலமென்றே கொள்வதல்லாற் குரைகடல் வெறுப்பதுண்டோ?
புலவர்கள் சபையிற்கூடிப் புன்கவியாளர் சார்ந்தால், நலமென்றே கொள்வதல்லானவில்வரோ பெரியோர் குற்றம்.

நடத்தி, சிம்மாசனத்தின்மீது வீற்றிருக்க முடிசூட்டினர்களோ அவ்விதமாய் அநேக விவாகங்களை குறைவற நிறைவேற்றி அவ்வன்னிய வரசர்களால் கொடுக்கலான பொன்யாழி, முகத்தோடா, பொன்காப்புகள், பொன்கணையாழி, பொன் னுருத்திராக்கக்கண்டிகை, பொன்கற்ணபூஷணம், பட்டு பீதாம்பரங்கள், சுவர்ண புஷ்பங்கள் முதலிய பரிசுகளைப் பெற்றிருக்கிறார்.

இவ்வித வைபவங்களைக் கண்ட "கண்மனப்பார்ப்பார்" ஒருங்குகூடி பின்வரும் விஷயங்களை எழுதலானர்.

(1) ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிப ஸ்ரீமத் ஜகத்குரு சங்கராசார்யார் மடம் முத்திர் கர்த்தாவாகிய லாலாபேட்டையிலிருக்கும் சுப்பிரம்மண்ய ஜ்யோதிஷகர்.

வாலாஜா தாலுக்கா 4-ம் நெ வசூர்மதுரா ராமாபுரத்திலிருக்கும்வன்னியஜாதிக்கி இப்போது சிலநாளாய் நூதனமாக யேர்ப்பட்ட ஷை ஜாதியுள்ள குரு மாணிக்கவாசக வர்மஅன்னப்ப குருவுக்கும்அவர்க்கு சிஷ்யனை கிருஷ்ணரெட்டிவகையறுக்களுக்குத் தெரியப்படுத்தும் பத்திரிக்கை.

உங்களூர் மணியகார் குப்புசாமய்யர் தமயனர் இராமஸ்வாமய்யர் உங்கள் வீட்டு விவாகசங்கதியைபத்தி இதுவரையில் நடந்த மாமூலுக்கு அதிகப்பட்டு நடத்தவேண்டியதாய் கடதாசியினல் தெரியவருகிறது. இதர்க்கு சரியான மறியாதையாய் கேழ்விக்கு ஜவாபு மனதில் க்றூறம் வைக்காமல் ஜவாபு சொல்வதர்க்கு இஷ்டமிருக்கும் பக்ஷத்தில் இதனடியில் மேல்கண்டவர்கள் கையொப்பம்செய்து யென்னிடம் அனுப்பிவைக்கவும் ஆகையால் கலக்கமில்லாமல் ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளவாம்.

19-8-09. (ஒப்பம்) சுப்பறமணீயஜ் ஜோதிஷர்.

(2) பரிதி மதி வன்னி மூவகைசந்ததிகட்கும் மகுடாதிபதியாய் விளங்காநின்ற மகாவிசேஷம் அந்தியூர் பிரம்ம வன்னிவம்ச க்ஷத்ரியமஹா மடாலய இரத்தின சிம்மாசனதிபதி சக்கரவர்த்தி சிவாராஜயோகி ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகராதீன பரம்பரை சேனதிபதியாகிய நாம் வாலாஜா தாலுக்கா லாலாபேட்டையிலிருக்கும் சுப்பரமண்ய ஜோதிஷருக்குத்தெரிவித்த பதில்எச்சரிக்கை யாதெனில்:—

நீர் அனுப்பிய கடிதப்பிரகாரம் சன்னிதானத்திற்கு தயவுடன் வருவதில் யாதொரு தடையுங்கிடையாது. இப்படிக்கு,

முகாம், கோடியூர் 18-8-09. } (ஒப்பம்.) சே. மு. மாணிக்கவாசக நாயகவர்மா, சேனதிபதி. அந்தியூர்

(3) நான் யெழுதிய பத்திரிக்கை சந்தோஷச்சது நிஸ்சயமாயிருந்த பக்ஷத்தில் அதில் கையொப்பம்செய்து அனுப்பிவிப்பதும் தவிர நான் ஒரு

மடத்துக்கு முத்திராதிகாரியானதால் சரியான சன்மானத்துடன் வரவழித்தால் *வரசாத்தியப்படும்.

(ஒப்பம்.) சுப்பறமனீயஜ் ஜோதிஷர்.

(4) க்ஷேமம், க்ஷேமத்தை சன்னிதானம் அரியவிருப்பம் தங்களுக்கு எந்த அதிகாரங்களிருக்கின்றதோ, அந்த அதிகாரங்களுக்குரிய அந்தஸ்துடன் இவ்விடம் வந்து சேரலாம். தங்கள் வருகையை யானும், எனது சிஷ்யர்களும் எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கின்றோம். தாங்கள் காலஹரணஞ்செய்வதில் நலமன்று, நாம் பிரயாணப்படபோவதால் தங்களின் வருகையைச் சற்று பார்த்தானந்தித்து போகலாமென்றிருக்கிறது.

முகாம், கோடியூர்.
18-8-1912.

இப்படிக்கு,
(ஒ) சே.மு மாணிக்கவாசகநாயகவர்மா,
சேலூதிபதி, அந்தியூர்.

(5) நானனிப்பிய நிருபத்தை கைபொப்பமிட்டு அனுப்புவதும் தவிர சன்மானம் பென்று யெழுதியதர்க்கு சரியான பிறதி கிடைக்காததால் அவசறமென்பதில் உங்களிஷ்டம்.

(ஒப்பம்) சுப்பரமணியஜ் ஜோதிஷர்.

(6) எமது ‡தாதைகளிலொருவரால் உதைக்கப்பெற்றவரும், உம்மைப் போன்றவர்களின் செய்கைகளைக்கண்டு தீர்க்கவிசாரணைசெய்து நீதி செலுத்திவரக்கூடியவரிடத்தில் உம்மாலெனக்கு அனுப்பிய நிருபத்தை அனுப்பப்பட்டிருக்கிறது. அவர் மூலமாய் உமக்கு சன்மானம் கிடைக்கக் கூடும். அச்சமயத்தில் நீர் வந்திருக்குங் காரியங்களைப் பற்றி முறையமிட்டுக் கொள்வதில் தடையில்லை.

இப்படிக்கு,

முகாம், கோடியூர்,
18-8-1909.

(ஒ)சே. மு.மாணிக்கவாசகநாயகவர்மா,
சேலூதிபதி, அந்தியூர்.

---

* என்றதற்கு காரணம் யாதெனில்:—பசுக்கூட்டங்களை இதுகாலம் புலியின்தோலை போர்த்துக்கொண்டு மிரட்டி வாயிற் போட்டுக்கொண்டு திரிந்த இஜ்ஜோதிஷபுலி உண்மையான இச்சிம்மத்தின் முன்பாக வந்து நின்று வசனிக்க வல்லமையற்று கீழ்விழுந்த போதிலும் என் மீசையில் மண்பட்டதோ பாருங்களென்று சொன்ன வீரதீரபுருஷனைப்போல் தன்னை சன்மானத்துடன் வரவழைககவுங் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

இவருக்குச் சன்னிதானம் சன்மானமேதாவது அனுப்பிக்கொடுப்பார்களோ வென்றுயோசிக்கில் சன்னிதானத்தில் சன்மானம் பெறக்கூடிய அந்தஸ்திவரிடத்திலில்லை.

‡ திருவருணை மாநகரத்தை அரசாட்சி செய்துவந்த பிரபடதேவ மஹாராஜரின் திருக்குமாரரான ஸ்ரீ வல்லாள மஹாராஜாரவர்களின் தர்மதான தவப்பலத்தாலுதித்திருக்கும் திருமைந்தன்.

இத்தியாதி வைபவங்களையெல்லாம் முடித்து இந்நான்கு திக்குகளிலும் "விஜயம்" பெற்றுக்கொண்டு இடையஞ்சாத்து வந்ததில் சுபேதார் மேஜர் ஜெயராம நாயகர் சர்தார் பஹதூர் ஜாகீர்தார் அவர்களுடைய குமாரராகிய கணபதிநாயகர் அவர்களால் பழயசித்தேரி கிராமத்தில் தமக்கு தத்தஞ்செய்யப்பட்டிருக்கும் காலி மனை நிலத்தோடு முன்வருமாறு விருத்திசெய்திருக்கின்றனர். சுபம்.

## ரிபோர்ட்டு.

இதன் மூலமாய் சகலருந் தெரிந்துக்கொள்ளவேணுமாய் சேலம் வன்னிகுல க்ஷத்ரிய கழறிற்றறிவாரென்னும் ஸ்ரீ சேரமான் பெருமாணுய னூர் சபையை ஸ்தாபித்துள்ளவரும் ஷை சபைக்கு அக்கிராசனாதிபதியாக அமர்ந்துள்ளவருமாகிய யான் தெரிவித்துக்கொள்வது யாதெனில்:—

சேலம் சுதேசாபிமானி அச்சுக்கூடத்தில் சென்ற 1910ௗ ஜனவரி ௴ 24௳யில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற மேற்காட்டிய சபையின் வரலாறும், கருத்துகளுமடங்கிய ரிபோர்ட்டில் காட்டியுள்ள பிரகாரம் ஷை சபை மெம்பர்கள ஒத்து நடந்துகொள்ளாததினாலும், அன்றி, ஷை சபைக்குரிய அலுவல்களை நடத்திவரக்கூடிய நிர்வாகமெம்பர்கள் நமது உத்திரவுக்கு கீழ்படிந்து நடந்துகொள்ளாததினாலும் என் மனதுக்கு வருத்தமுண்டாகி யென்வசம் வந்திருந்த ரொக்கங்களை முன்வருமாறு செய்து விடப்பட்டிருக்கிறது.

| வரவு விபரம். | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| கொக்கேரி-வர்த்தகம் செ. சாமி முனிசாமி ரெட்டிவர்மா | 10 | 0 | 0 |
| கோட்டநத்தம்-வர்த்தகம் அண்ணாசாமி ரெட்டி ... | 10 | 0 | 0 |
| கோடியூர்-வர்த்தகம் குப்புசாமி வர்மா ... ... | 10 | 0 | 0 |
| சேலம்-ஜெனரல் கன்ட்ருக்டர் குருசாமி பிள்ளை ... | 10 | 0 | 0 |
| ரேணுகுண்டா-பாரஸ்டர் சித்த பிள்ளை ... ... | 10 | 0 | 0 |
| கிச்சிபாளையம்-வண்டிபட்டரை மாரிமுத்துபடையாட்சி | 10 | 0 | 0 |
| மணக்காடு-கிருஷி வீரப்ப கண்டர் ... ... | 10 | 0 | 0 |
| ஐயந்திருமாலிகை செங்கல்சூளை இராமசாமி கண்டர் ... | 10 | 0 | 0 |
| கொல்லப்பட்டி ஷை தாண்டவ கண்டர் ... | 7 | 0 | 0 |
| மேற்கண்டதுகைக்கு சேவிங்ஸ் பாங்கி வட்டிபிரகாரம் கடந்த சாதாரணௗ சித்திரை௴ 1௳ முதற் நாளது பரீதாவிௗ ஆடி௴ 21௳ வரையில்கூடிய வட்டி மொத்தம் ரூபா ... ... ... | 6 | 0 | 10 |
| ஆக வரவு மொத்தம் ... | 93 | 0 | 10 |

| செலவு விபரம். | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| இதில் சாதாரணஞூ ஆடிமீ´ த்திய உற்சவ செலவு ... | 9 | 12 | 0 |
| விரோதிகிருதுஞூ ஆடிமீ´ த்திய உற்சவ செலவு ... | 3 | 4 | 0 |
| பரிதாவிஞூ ஆடிமீ´ த்திய உற்சவ செலவு ... | 7 | 0 | 6 |
| ஷை நாயனார்பேரால் மடம் ஸ்தாபிக்கவேண்டி காலி நிவேசனம், வீடு, கிணர், பலவிருக்ஷங்களுள்பட கிரயம் ரூபா 200-0-0 ல் ரிபேர் செலவுக்காக பிடித்த ரூபா 30-0-0 ம் போக மீதி தொகை கொடுத்து வாங்கியது ... ... ... | 170 | 0 | 0 |
| கிணர் ரிபேர் செலவு மொத்தம் ... .. | 53 | 0 | 4 |
| ஆக செலவு மொத்தம் ... | 243 | 0 | 10 |

எஞ்சிய ஷை தொகை 150-0-0 மும் எனது மூலசொத்துக்களிலிருந்து ஷை மடத்திற்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

(1) சேலம் வன்னிகுல க்ஷத்ரிய கழறிற்றறிவாரென்னும் ஸ்ரீசேரமான் பெருமாணயனர் சபையின் அக்கிராசனாதிபதி ஷை சபையின் பொக்கிஷதாரிக்கு தெரிவிப்பதாவது யாதெனில்:—

மேற்குறித்த சபை விருத்தி விஷயமாய் உம்மிடம் சாதாரணஞூ ஆனிமீ´ 13உ வரையில் இருப்பாகவிருக்கும் ரொக்கம் ரூபாய் எழுபத்திரண்டு அணா பதிமூன்று பைசா பதினொன்று (72-13-11) ம் எவ்வித செலவும் செய்யாமல் வைத்திருக்கவேண்டியது. ஏனெனில் சபையில் குழப்பங்களேற்பட்டிருப்பதினால் மெம்பர்கள் துகைகளைவாபீஸ்கொடுத்து விடவேண்டியிருப்பதாலும், சபையின் சகல ரிகார்ட்டுகளையும் வாபீஸ் வாங்கிக்கொள்ளவேண்டியிருப்பதாலும் செலவுசெய்யக்கூடாது. மீறியுமதிஷ்டப்படி செலவு செய்வீராகில் பின்னால்வரும் கேழ்விகளுக்கு பாத்தியஸ்தராகுவீரென்று இதன் மூலமாய் தெரிவித்திருக்கின்றேன்.

சேலம்கழறிற்றறிவார் சபை, 8-7-1910.

இப்படிக்கு,
சே. மு. மாணிக்கவாசக நாயகவர்மா,
அக்கிராசனாதிபதி.

(2) சேலம் வன்னிகுல க்ஷத்ரிய கழறிற்றறிவார் எனும் ஸ்ரீசேரமான் பெருமாணயனர் சபை அக்கிராசனாதிபதி சே. மு. மாணிக்கவாசக நாயகவர்மா அவர்களுக்கு ஷை சபையின் பொக்கிஷதார் தெரிவிப்பது யாதெனில்:—தாங்கள் 8-7-10 ல் எழுதிய கார்டு கிடைத்து விபரமறிந்தேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக சொன்னால் அதற்கு ஜவாபு கிடைக்காது. சபையார்கள் உத்திரவின்படி நடந்துக்கொள்ள சித்தமாய் இருக்கிறேன். இது சங்கதி அறியவும்,

வேணும்

சாதாரணஞூ ஆனிமீ´ 31உ

(ஒப்பம்) மே.நே. அண்ணாமலைசெட்டியார்,
பொக்கிஷதார்.

## வந்தனோபசார கடிதங்களிற் சிலது.

(1) ஸ்ரீமத் மகாவிசேஷம் அந்தியூர் பிரம்ம வன்னி வம்ச க்ஷத்ரிய மஹா மடாலய இரத்தின சிம்மாசனாதிபதி சக்கரவர்த்தி சிவராஜயோகி ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகராதின பரம்பரை சேனாதிபதி அவர்கள் திவ்விய சமுகத்திற்கு

கொக்கேரி கிராமம் சிஷ்யர்களிலொருவராகிய செ. சாமி முனிசாமி ரெட்டிவர்மன் மிகவும் வணக்கத்துடன் தெண்டனிட்டு பரிந்து தெரிவிப்பது யாதெனில்:—

இவ்விடம் நாங்களனைவரும் க்ஷேமம். தங்கள் க்ஷேமத்தை மாணாக்கருக்கு அடிக்கடி தெரிவித்துவரவேணுமாய்க் கோருகின்றேன்.

எனது சம்சாரம் ரொம்பவும் காயலாவாய் ஜன்னி கண்டு பிராணன் ஹிம்சைபடுங்காலத்தில் தங்களையும், தங்கள் பத்னியாகிய எனது தாயாரின் பாததரிசனஞ்செய்துக்கொள்ள பிரார்த்தனை செய்துக்கொண்டதின் பேரில் கொஞ்சம் சுமாராயிருக்கிறது.

இதுவன்றி கிருஷ்ணரெட்டியின் சிரேஷ்ட குமாரன் ரொம்பவும் காயலாவாய் பிராணன் ஹிம்சைபடுங்காலத்தில் தங்கள் திருவடிக்கிபிரார்த்தனையாய் ஒரு பசுங்கன்றை விடப்பட்ட பிறகு கொஞ்சம் சௌக்கியப்பட்டிருக்கிறது.

முதியோர்களின் வாக்கினால் "அன்பான மாணாக்கருக்கரிய குருவே தெய்வம்" என்று சொல்லப்பட்டிருப்பதின்று பிரதியட்சமாய் கண்டயான் தங்களுக்கு எனதுடல் பொருளாவி மூன்றுந் தத்தஞ் செய்யக் கருதி சன்னிதானம் வந்து சேருகின்றேன்.

இதிலேதாகிலும் பிழையான் செய்திருந்தபோதிலும் குருஸ்வாமிகள் மன்னிக்கவேணுமாய் கோருகின்றேன்.

கொக்கேரி, 8-2-1909. } இங்ஙனம்: தங்கள் சிஷ்யன்,
(ஒப்பம்) செ. சாமி முனிசாமி ரெட்டிவர்மா,

Dear Sir,

(2) தாங்கள் வி. பி. மூலமாக அனுப்பிய புத்தகங்கள் மூன்றும் பெற்றுக்கொண்டேன். அவைகளுக்காக சேரவேண்டிய தொகை அணா 8-ம் சேர்த்துவிட்டேன். இதைக் குறித்து கடிதம் எழுத மறந்துவிட்டேன். மன்னிக்கவும். தாங்கள் நமது மரபினரின் அபிவிருத்திக்காக கஷ்டப்பட்டு இவ்வித புத்தகங்கள் அச்சிட்டது நாங்கள் செய்த தவப்பலனே. இதுபோலவே இன்னும் உபயோகமான புத்தகங்கள் அச்சிட்டால் நமது மரபுக்கு மிகுந்த நன்மையுண்டு. தங்களிடம் தற்காலம் அச்சிடப்பட்டு இருக்கிற புத்தகங்கள் என்னென்னவோ? தயைசெய்து தெரிவித்தால் வேண்டியவைகளை வாங்கலாம். மன்னிக்கவும். Yours truely,

23-9-1909 *Mylapore,* M. KUPPUSAMI NAYACAR,

## (3) ஸ்ரீலஸ்ரீ, சே. மு, மாணிக்கவாசக நாயகவர்மா,

அவர்கள் சமுகத்திற்கு.

கோயமுத்தூர், ரா. பழனி-குப்புசாமி படையாக்ஷிவர்மன் அநேக வணக்கத்துடன் அன்பார்ந்து எழுதிக்கொண்டது என்னவென்றால்,

தாங்களனுப்பிய புத்தகங்கள் வந்து சேர்ந்தன. அப்புஸ்தகங்களை வாசித்துப்பார்த்தனன். அரசகுலத்தாரின் சரித்திரங்கள் யாவரும் எளிதில் உணரும்படி "உள்ளங்கை நெல்லிக்கனிபோல்" தெற்றென எழுதப்பட்டுள்ளன. ஆங்காங்கு இரைந்து கிடக்குமரசகுலத்தாரின் சரித்திரங்களை ஒருங்குசேர்த்தி யுருட்டித்திரட்டி யோர் புஸ்தகமாக செய்து கொடுத்ததைவிட நம்மவர்க்குச் செய்யும் வேறு பேருபகாரம் வேறொன்றுமில்லை. நாங்கள் உபநயனம் தரித்துக்கொள்ளவேண்டுமென்கிற பேரவா வெகுநாளாயிருந்துக்கொண்டிருந்தும், அதை நமது குலாசாரப்படி நடத்துபவர் கோயமுத்தூரில் ஒருவருமில்லையென்று மனக்கவலையிருந்துக்கொண்டிருந்தது. அதற்குள்ளாக "கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற்போல்" தங்களிடத்திலிருந்து புஸ்தகங்களும் வந்தன. நாங்கள் மிகவும் ஏழை, உபநயனகாரியத்தை தங்களிடத்திலேயே வந்து முடித்துக்கொள்ளவேண்டுமென்று ஆலோசித்திருக்கிறோம். ஆகையால் அக்காரியத்தை சொற்பமாய் முடிக்க எவ்வளவு பிடிக்கும். அதன் விவரங்களைப் பற்றி பதில் கடிதம் தெரிவிக்கவேணுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம். கோயமுத்தூரில் பிளேக், ஆகையால் நாங்கள் கோயமுத்தூருக் கடுத்த அம்மாபாளையம் சத்திரத்திலிருந்தோம். அங்கு கார்டு, கவர், முதலியன கிடைப்பது மிகவும் அரிது. ஆகையால் கோயமுத்தூர் வந்து தங்களுக்குக் கடிதம் போட்டதைப் பற்றி மன்னிக்கவேணுமாய்க் கோருகின்றோம்.

கோயமுத்தூர்,<br>9-11-1909 } இங்ஙனம்:<br>(ஔ) ரா-ப. குப்புசாமி படையாக்ஷிவர்மன்,

(4) ஸ்ரீலஸ்ரீ சே. மு. மாணிக்கவாசக நாயகவர்மா சேனாதிபதியவர்கள் உபயபாதத்திற்கு கீழ்பெரம்பலூர் கிராமத்திலிருக்கும் P. ரங்கசாமி படையாட்சி அஷ்டாங்கநமஸ்காரஞ்செய்து மிகுந்த வணக்கத்துடன் எழுதிக்கொண்ட விண்ணப்பம் என்னவெனில்,—

தங்களால் அனுப்பிய ஷோடசகிரியா சங்கிரஹமும், வன்னிகுலத்திரட்டும் எமக்கு கிடைத்ததில் "நித்திய தரித்திரனுக்கு நிதிகிடைத்தாற்போலும்" "காணுக்கப்பல் கரைவந்து சேர்ந்தாப்போலும்" கண்டானந்தப்படலானேன்.

எங்கள் கிராமமோ இவ்விடத்திலுள்ள கிராமத்திற்கெல்லாம்பெரிது இதில் நம்மவர்கள் சுமார் 2500 ஜனங்கள் வசிக்கிறார்கள். ஆனால் கல்வியிலும், அறிவிலும் முதிர்ந்தவர்களில்லை.

தங்களால் அனுப்பப்பட்டிருக்கும் ஷோடச கிரியாசங்கிரஹத்தின் படி நம்மவர்கள் நடத்திவரவேண்டுமோனால் மந்திரலோபமின்றி நடத்திவைக்கக்கூடிய பௌரோகிதன் கிடைப்பது அரிதாயிருக்கிறது.

ஆகையால் ஷ கிரியைகளை சம்பூரணமாய் தாங்களேவெளிப்படுத்துவீர்களானால் இவ்வுலகத்திற்கு முன்பு வேதவியாசர் செய்த நன்மையைப்போல் நற்காலம் நமது வம்சத்தாருக்கும் தாங்கள் செய்த நன்மையாயிருப்பதுமன்றி நமது மரபினரும் கூடிய சீக்கிரம் சீரடைவார்களென்பதில் சந்தேகமில்லை.

ஸ்ரீசிதம்பர தேவஸ்தானத்தில் பித்தர்புரசமஸ்தானம் பெரியவகுப்பு ஜமீன்தார் இராஜஸ்ரீ சாமிதுரை சூரப்பசோழனாவர்களுக்கு ஸ்ரீநடராஜர் முன்னிலையிலுள்ள பஞ்சாக்ஷரப்படியாதிகளிலிருத்தி மகுடாபிஷேகம் நடந்தேறிய காலத்தில் யான் அவ்விடம் வந்திருந்தேன். அச்சமயம் தங்கள் தெரிசனம் கிடைக்காமற் போனது எனது துர்பாக்கியம். ஆயினும், நான் கூடிய சீக்கிரம் தங்கள் தெரிசனத்திற்கு வரசித்தமாயிருக்கிறேன்.

தங்களிடமிருக்கும் 32-விருதுகளைப்பற்றிக்கூறும் திருமுகப்பத்திரிக்கையும், தங்களது மஹா மடாலய சட்டதிட்டமும் வி. பி. யில் அனுப்பி கொடுக்கும்படியாய் மிகுந்த வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கீழ்பெரம்பலூர், 27-11-1909 } (ஒப்பம்) P. ரெங்கசாமி படையாட்சி.

(5) மஹா கனம்பொருந்திய எனது குலகுரு சுவாமியார் அவர்கள் திவ்விய திருவடிக்கு அரசூர் வ. கு. க்ஷ. உபசங்கத்தின் காரியதரிசியாகிய வீ. கந்தசாமி படையாட்சி தாங்களிருக்குந் திக்குநோக்கி சாஷ்டாங்க தெண்டஞ்சமர்பித்து எழுதிக்கொண்ட விண்ணப்பமாவது க்ஷேமம், க்ஷேமங்களுக்கு எதிர்பார்க்கிறேன்.

தாங்களனுப்பிய (அரசர்களின் நித்யகன்மச் சுருக்கம்) இரண்டுபுஸ்தகமும் கிடைத்தது பார்வையிட்டு பேரானந்தத்தையடைந்தேன். ஷ புஸ்தகத்தை எனது சுவாமியாரும் பார்வையிட்டு ரொம்பவும் அருமையாக எழுதியிருப்பதாகவும் சந்தோஷப்பட்டார்.

இப்புஸ்தக விஷயத்தில் தாங்கள் எடுத்துக்கொண்ட கஷ்டத்திற்கு நான் ரொம்பவும் சாஷ்டாங்க தெண்டனிடுகிறேன்.

இங்ஙனம்,

அரசூர், 9-1-1912. } (ஒப்பம்) வீ. கந்தசாமி படையாட்சி,
வ. கு. க்ஷ. உ. ச. காரியதரிசி.

(1)குலகுருவின் பட்டப்பெயரை குறைத்துவிட கேட்டெழுதிய கடிதம்.

ராஜஸ்ரீ சே. மு. மாணிக்கவாசக நாயகவர்மா அவர்களுக்கு அன்பார்ந்த வந்தனம். தாங்கள் 24-11-10 ல் கொக்கேரி முகாமிலிருந்து அனுப்பியகடிதம் இன்று கிடைத்து சங்கதி தெரியலானேன். நோட்டிஸின் முகப்பில் சீல் சேர்க்கிறேன். அன்றி குரு ஸ்துதி ஒன்று வித்வான் ஜா. பசுபதிநாயகரவர்களால் எழுதிக்கொடுக்கப்பட்டிருப்பதையும் சேர்க்கிறேன். ஆனல் "ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகர்" என்றுள்ளதை மாத்திரம் போடக்கூடாதென்றுசொல்லுகிறார்கள். ஏனென்றால் * ஜகத்குரு சங்கராசாரி சுவாமிகளுக்கே இல்லாதபோது ஒரு ஜாதி குருவுக்கு அப்படி போடுவது தகுதியல்லவென்கிறார்கள். ஆகையால் ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்டநாயகர்" என்ற பட்டத்தைப்பற்றி தீர யோசித்து பதில் எழுதவும்.

பெரம்பூர் பாரக்கஸ்,
மதராஸ்.
25-11-1910.

இப்படிக்கு,
(ஒப்பம்) ஆ. சுப்பிரமணிய நாயகர்,

## வீண்மனஸ்தாபம்.

நற்சீடர்களே! சேனாதிபதியவர்கள் செய்துக்கொண்ட போஸ்டு முறைப்பாட்டிற்கு பெங்களூர் சூப்ரெண்ட் அவர்களிட நெ. 18003 காட்டி 27-11-08-ல் முடிவான பைலிலுள்ள அசலுக்கு சேலம் போஸ்டுமாஸ்டர் நெ. 1821 காட்டி 5-12-08-ல் அனுப்பிய நகல் வருமாறு:—

ம-ா-ா-ஸ்ரீ, ஈரோடு சப்டிவிஷன் இன்ஸ்பெக்டர் அவர்கள் சமுகத்திற்கு நமது மடத்திற்கு சம்மந்தப்பட்ட மாணிக்கவாசக நாயகரால் 26-4-07-ல் 259-நெ. ல் செய்த புகார் மனுவைப்பார்த்தேன். அதில்கண்ட 236, 237, 300, 304 இந்த நான்கு நெ. களில் செய்த வீ. பீ. உருப்படிகளை நான் 16-4-07-ல் பவானியில் வாபீஸ் பெற்றுக்கொண்டேன். இது விஷயமாய் ஷை மாணிக்கவாசக நாயகருக்குத் தெரிவித்திருந்தும் திரும்பவும் தாவாசெய்தபடியால் ஷை புஸ்தகங்களுடைய கிரயம் 1-8-0-ம் இப்போது தங்களிடம் கொடுத்துவிட்டேன். தற்சமயம் ஷை புஸ்தகங்களை தருவித்துக்கொடுக்க முடியாததால் ஷை புஸ்தகங்களின் கிரயத்தையே கொடுத்துவிட்டேன். ஷை யாருக்கும் இது விஷயமாய் உடனே தெரிவிக்கிறேன்.

முகாம், பொகளூர்,
8-11-1908.

ஒப்பம். ஸ்ரீலஸ்ரீ பாஸ்கர சுவாமி,
வன்னியர்மடம், பவானி.

(இன்னுஞ்சேரும்.)

---

* இவரின் வரலாறு இவ்விதமெனத் தெரியாவிட்டால் இந்து சாஸ்திர பீமானி யென்பதில் கோளரகஸ்யம் 21-வது பக்கத்தில் காட்டப்பட்டிருப்பதை பார்த்தவர்கள் மேற்குறித்தவாறு இவரை விசேடித்தும், மற்றவர்களை தாழ்த்தியும் [illegible]ன்றறியவேண்டியது.



ஸ்ரீலஸ்ரீ சே. மு. மாணிக்கவாசக நாயகவர்மா.